# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டம்

---

(2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2002, ஒற்றோபர் மாதம் 25 ஆந் திகதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 35.00** **தபாற் செலவு : ரூபா 11.25**

# 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டம்

[2002 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

எ. வ. – ஒ. 43/95
4594

## குற்றவியல் கரு மங்களில் இலங்கையினாலும் குறித்துரைக் கப்பட்ட நாடுகளினாலும் உதவியளிக்கப்படுவதற்கும், அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கான தொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :–

1. இச்சட்டம் 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

## பாகம் I

### இச்சட்டத்தின் ஏற்புடைமையும், உதவிக்கான கோரிக்கையும்

2. (1) அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம், அதிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பொதுநலவாய நாடு தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென வெளிப்படுத்தப்படலாம். சட்டத்தின் ஏற்புடைமை.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், அத்தகைய கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று அல்லது, அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று வலுவுக்கு வருதல் வேண்டும்.

(3) குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளிப்பதற்காக, இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னராயினுஞ்சரி அல்லது பின்னராயினுஞ்சரி, இலங்கைக்கும் ஏதேனும் பொதுநலவாயம் சாராத நாட்டுக்குமிடையே உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளைக் கவனத்திற்கொண்டு, அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காக மட்டும் அமைச்சர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம்

அக்கட்டளையிற் குறித்துரைப்பது உசிதமானதெனக் கருதக் கூடியவாறான அத்தகைய வரையறைகளுக்கும் நிபந்தனை களுக்கும் அமைய, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்தகைய பொதுநலவாயம்சாரா நாடு தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் எந்த உடன்படிக்கையின் விளைவாக அது ஆக்கப்பட்டதோ அந்த உடன்படிக்கையின் நியதிகளை எடுத்தியம்புதல் வேண்டுமென்பதுடன், அக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று அல்லது அதன் கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று வலுவுக்கு வருதலும் வேண்டும் ; அத்துடன் எந்த உடன்படிக்கையின் விளைவாக அக்கட்டளை ஆக்கப்பட்டதோ அந்த உடன்படிக்கை வலுவிலிருக்கும்வரை மட்டுமே அது வலுவிலிருத்தலும் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், அது கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானவாறு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கட்டளை, அதற்கு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து, ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஓராம் உட்பிரிவின்கீழான அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழான கட்டளையொன்று எத்தேதியன்று நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(7) ஓராம் உட்பிரிவின்கீழ் அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்று எந்தப் பொதுநலவாய நாடு அல்லது பொதுநலவாயம்சாரா நாடு தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ளதோ, அந்தப் பொதுநலவாய நாடு அல்லது பொதுநலவாயம்சாரா நாடு ஒவ்வொன்றும் இதனகத்துப்பின்னர் 'குறித்துரைக்கப்பட்ட நாடு' ஒன்றாகக் குறிப்பீடு செய்யப்படுகின்றது.

3. இச்சட்டத்தின் குறிக்கோள், பின்வருவன உட்பட்ட, குற்றவியல் கருமங்களில் இலங்கையினால் உதவியளிக்கப்படுவதனையும், பெறப்படுவதனையும் வசதிப்படுத்துவதாகும் :— சட்டத்தின் குறிக்கோள்.

(அ) சாட்சிகளையும் சந்தேக நபர்களையும் கண்டுபிடித்தலும் அடையாளங்காணுதலும்;

(ஆ) ஆவணங்களைச் சேர்ப்பித்தல் ;

(இ) சாட்சிகளை விசாரணைசெய்தல் ;

(ஈ) சான்றை, ஆவணங்களை அல்லது வேறு பொருள்களைப் பெறுதல் ;

(உ) தேடுகைக்கும் கைப்பற்றுகைக்கும் ஆன கோரிக்கைகளை நிறைவேற்றுதல் ;

(ஊ) சாட்சியொருவராகத் தோன்றுவதற்குக் கட்டுக்காவலில் உள்ள ஆளொருவரைத் தற்காலிகமாக இடமாற்றுதல் ;

(எ) சாட்சிக்காரர்கள் நேரடியாகத் தோன்றுவதனை வசதிப்படுத்துதல் ;

(ஏ) ஆவணங்களையும் வேறு பதிவேடுகளையும் வழங்குதல் ;

(ஐ) எதேனும் குற்றவியற் செயற்பாட்டின் வரும்படிகள் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்தல் ;

(ஒ) குற்றப்பணங்களைச் செலுத்துவதற்கான அல்லது ஆதனத்தைக் கைப்பற்றுவதற்கான அல்லது ஆதனத்தை முடக்குவதற்கான கட்டளைகளை வலுவுறுத்தல்.

4. நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக மத்திய அதிகாரியாக இருத்தல் வேண்டும் ; (அவர் இதனகத்துப்பின்னர் "மத்திய அதிகாரி" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்). மத்திய அதிகாரி.

குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டினால் செய்யப்படும் விண்ணப்பங்கள்

**5.** குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டிலுள்ள குற்றவியல் நீதிமன்றமொன்றின் நியாயாதிக்கத்தினுள் வருகின்ற குற்றவியல் கருமமொன்று தொடர்பாக உதவியளிக்கும்படி கோரிக்கை விடுத்து அந்நாட்டின் தோதான அதிகாரியினால் மத்திய அதிகாரிக்குச் செய்யப்படும் விண்ணப்பமொன்று —

(அ) அத்தகைய விண்ணப்பம் பொருளளவில் இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள தோதான படிவத்தில் செய்யப்பட்டாலொழியவும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய விண்ணப்பம் அந்நோக்கத்துக்காக மத்திய அதிகாரியினாற் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆவணங்களுடன் சேர்த்தனுப்பப்பட்டாலொழியவும்,

மத்திய அதிகாரியினால் ஏற்றுக்கவனிக்கப்படுதலாகாது :

உதவியளிக்க மறுத்தல்.

**6.** (1) இச்சட்டத்தின்கீழ் உதவியளிக்கப்படுவதற்காகக் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் தோதான அதிகாரியினால் விடுக்கப்படும் கோரிக்கையொன்று, மத்திய அதிகாரியின் அபிப்பிராயத்தில் —

(அ) எச்செயல் அல்லது செய்யாமை ஒன்று இலங்கையில் புரியப்பட்டிருப்பின் இலங்கையின் சட்டத்தின்கீழ் தவறொன்றாக அமைந்திராதிருக்குமோ அச்செயல் அல்லது செய்யாமை தொடர்பில் ஆளொருவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுத்தல் அல்லது அவருக்குத் தண்டனையளித்தல் தொடர்பானதாக அக்கோரிக்கை இருப்பின் ;

(ஆ) அரசியற்றன்மைத்தான தவறொன்றுக்காக ஆளொருவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுத்தல் அல்லது அவருக்குத் தண்டனையளித்தல் தொடர்பானதாக அக்கோரிக்கை இருப்பின் ;

(இ) எச்செயல் அல்லது செய்யாமை ஒன்று இலங்கையில் புரியப்பட்டிருப்பின் இலங்கையின் இராணுவச் சட்டத்தின்கீழ் மட்டுமே தவறொன்றாக அமைந்திருக்குமோ அச்செயல் அல்லது செய்யாமை தொடர்பில் ஆளொருவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுத்தல் அல்லது அவருக்குத் தண்டனையளித்தல் தொடர்பானதாக அக்கோரிக்கை இருப்பின் ;

(ஈ) குற்றமொன்று தொடர்பில் அல்லது அக்குற்றமாக அமைகின்ற அதே செயலினால் அல்லது செய்யாமையினால் புரியப்பட்ட இன்னொரு குற்றம் தொடர்பில் இலங்கையின் சட்டத்துக்கிணங்க ஆள் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளவிடத்து அல்லது அவருக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து, அக்குற்றத்துக்காக அத்தகைய ஆளுக்கெதிராகக் குற்ற வழக்குத் தொடுத்தல் தொடர்பானதாக அக்கோரிக்கை இருப்பின் ;

(உ) அக்கோரிக்கைக்கு இணங்கியொழுகுதலானது, இலங்கையின் அரசியலமைப்புக்கு முரணானதாக விருப்பின் அல்லது தேசிய பாதுகாப்பு, சர்வதேச உறவுகள் அல்லது பகிரங்கக் கொள்கை என்பவற்றுக்குப் பங்கம் விளைவிப்பதாகவிருப்பின் ;

(ஊ) பெருமளவிலானான ஏதுக்களை அடிப்படையாகக் கொண்டு, அக்கோரிக்கைக்கு இணங்கியொழுகுதல், எவரேனுமாளின் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயங்கள் அல்லது பிறப்பிடம் காரணமாக, அவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுத்தலை அல்லது அவருக்குத் தண்டனையளித்தலை செறிப்படுத்துவதாக விருப்பின், அல்லது அவருக்குப் பங்கம் விளைவிப்பதாகவிருப்பின்,

அக்கோரிக்கை முழுமையாகவோ பகுதியளவிலோ மறுக்கப்படுதல் வேண்டும்.

ஆயின், மத்திய அதிகாரியின் அபிப்பிராயத்தில், எச்செயல் அல்லது செய்யாமை இலங்கையில் புரியப்பட்டிருப்பின், இலங்கையின் சட்டத்தின் கீழ் குற்றமொன்றாக அமைந்திராதிருக்குமோ அச்செயல் அல்லது செய்யாமை, பாரதூரமான தன்மைத்தானதாகவும், இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட குற்றவியல் கருமமொன்றாகவும் இருப்பின், அத்தகைய செயல் அல்லது செய்யாமை தொடர்பான கோரிக்கையொன்றை ஏற்றுக்கவனிப்பது மத்திய அதிகாரிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, தவறொன்றானது, இலங்கையும், கோரிக்கையை விடுக்கின்ற குறித்துரைக்கப்பட்ட நாடும் திறத்தவர்களாகவுள்ளதும் அத்தவறைப் புரிந்தவரெனக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவரைப் புறத்தொப்படைப்பதற்கான அல்லது அவருக்கெதிராகக் குற்றவழக்குத் தொடுப்பதற்கான கடப்பாடொன்றைத் திறத்தவர்களின்மீது சுமத்துகின்றதுமான சர்வதேசச் சமவாயமொன்றின் நோக்கெல்லைக்குள் வருகின்ற தவறொன்றாகவிருப்பின், அரசியற்றன்மைத்தான தவறொன்றாகவிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### ஆட்களைக் கண்டுபிடித்தலும் அடையாளங்காணுதலும் தொடர்பாக உதவியளித்தல்

ஆட்களைக் கண்டுபிடித்தலும் அடையாளங் காண்பதிலும் உதவியளித்தல்

**7.** (1) குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிலுள்ள குற்றவியல் நீதிமன்றமொன்றின் நியாயாதிக்கத்தினுள் வருகின்ற ஏதேனும் குற்றவியல் கருமமொன்றில் —

(அ) சம்பந்தப்பட்டுள்ளவரெனச் சந்தேகிக்கப்படுகின்றவரும், அல்லது

(ஆ) சான்று அல்லது உதவி அளிப்பதற்கு இயன்றவராகவிருக்கின்றவரும்,

அத்துடன் இலங்கையில் உள்ளாரென நம்பப்படுகின்றவருமான ஆளொருவரைக் கண்டுபிடிப்பதில் உதவியளிக்குமாறு, அல்லது அத்தகைய ஆளின் அடையாளம் அறியப்படாதிருப்பின், அத்தகைய ஆளை அடையாளங்காண்பதிலும் கண்டுபிடித்தலிலும் உதவியளிக்கும்படி அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரியிடமிருந்து மத்திய அதிகாரி, கோரிக்கையொன்றைப் பெறுகின்றவிடத்து, மத்திய அதிகாரி அவரது தற்றுணிபில் பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு அத்தகைய கோரிக்கையை ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன், தோதான அதிகாரியின் கோரிக்கைக்கு இணங்கியொழுகுவதற்கு அவசியமாகக்கூடியவையான அத்தகைய விசாரணைகளைச் செய்விக்குமாறு அவருக்கு

கோரிக்கையையும் விடுக்கலாம் ; அத்துடன் அத்தகைய செயலாளரிடமிருந்து, அவ்விசாரணைகள் பற்றிய அறிக்கை யொன்றைப் பெற்றதன்மேல், அக்கோரிக்கையை விடுக்கின்ற குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்கு அத்தகைய அறிக்கையை அனுப்புவித்தலும் வேண்டும்.

(2) இலங்கையிலுள்ள ஏதேனும் குற்றவியல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வருகின்ற ஏதேனும் குற்றவியல் கருமத்தில் —

(அ) சம்பந்தப்பட்டுள்ளவரெனச் சந்தேகிக்கப்படு கின்றவரும் ; அல்லது

(ஆ) சான்று அல்லது உதவி அளிப்பதற்கு இயன்றவ ராகவிருக்கின்றவரும்,

ஆன ஆளொருவர், குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் உள்ளாரென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து, மத்திய அதிகாரி, அவரது தற்றுணிபில் அத்தகைய ஆளைக் கண்டுபிடிப்பதில் உதவியளிக்கும்படியும், அவரது அடையாளம் அறியப்படாதிருப்பின் அத்தகைய ஆளை அடையாளங் காண்பதிலும் கண்டுபிடிப்பதிலும் உதவியளிக்கும்படியும் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள தோதான அதிகாரிக்கு கோரிக்கை விடுக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழான கோரிக்கையொன்று, அத்தகைய உதவி எந்நோக்கத்துக்காகத் தேவைப்படுகின்றதோ அந்நோக்கத்தைக் குறித்துரைத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆளை அடையாளங்காண்பதனை அல்லது கண்டுபிடிப்பதனை எளிதாக்கக்கூடிய வேறேதேனும் தகவலை அளித்தலும் வேண்டும்.

## பாகம் III

## அழைப்பாணை மற்றும் வேறு ஆவணங்கள் சேர்ப்பிக்கப்படுவது தொடர்பாக உதவியளித்தல்

இலங்கையில் ஏதேனும் அழைப்பாணையை அல்லது ஆவணத்தைச் சேர்ப்பிப்பதற்காகக் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றினால் விடுக்கப்படும் கோரிக்கை.

**8.** (1) மத்திய அதிகாரி, குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் தோதான அதிகாரியிடமிருந்து —

(அ) அந்நாட்டில் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் ஓர் எதிராளியாகத் தோன்றுவதற்கு அல்லது ஒரு சாட்சியாக வருகைதருவதற்கு ஆளொருவரைத் தேவைப்படுத்துகின்ற அழைப்பாணையொன்றை அல்லது வேறு மன்றாணையை ;

(ஆ) அந்நாட்டில் குற்றவியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்ற நீதிமன்றமொன்றினால் வழங்கப் பட்டதும், அந்நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் செய்யப்பட்ட நீதிமன்ற முடிபொன்று பதிவுசெய்யப் பட்டுள்ளதுமான ஆவணமொன்றை,

இலங்கையிலுள்ள ஆளொருவருக்கு அது சேர்ப்பிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையொன்றுடன் சேர்த்துப் பெறுகின்ற விடத்து, மத்திய அதிகாரி அவரது தற்றுணிபில், அத்தகைய ஆள் எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிக்கின்றாரோ அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு அத்தகைய மன்றாணையை அல்லது ஆவணத்தை அனுப்பிவைக்கலாம்.

(2) தோதான அதிகாரி, மத்திய அதிகாரிக்கு விடுக்கப்படும் அவரது கோரிக்கையில் சேர்ப்பிக்கும் முறையைக் குறித்துரைத்துள்ளவிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய மன்றாணை அல்லது ஆவணம் எந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவான், அத்தகைய முறை இலங்கையின் சட்டங்களுக்கு ஒவ்வாதனவாக இருந்தாலொழிய, அத்தகைய மன்றாணையை அல்லது ஆவணத்தை, நடைமுறையில் சாத்தியப்படுமிடங்களி லெல்லாம், அத்தகைய கோரிக்கைக்கிணங்கச் சேர்ப்பிக்கப்படு வதனைச் செய்வித்தல் வேண்டும். கோரிக்கையில் குறித்துரைக் கப்பட்ட சேர்ப்பிக்கும்முறை இலங்கையின் சட்டங்களுக்கு ஒவ்வாததாகவிருக்குமிடத்து, நீதிவான் இலங்கையின் சட்டங் களுக்கிணங்க அத்தகைய மன்றாணை அல்லது ஆவணம் சேர்ப்பிக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(3) கோரிக்கை எவ்வாள் தொடர்பானதோ அவ்வாளுக்கு அத்தகைய மன்றாணை அல்லது ஆவணம் சேர்ப்பிக்கப்படு மிடத்து, நீதிவான் அது எப்போதும், எவ்வாறும் சேர்ப்பிக் கப்பட்டதென்பதைக் காட்டுகின்ற சான்றிதழொன்றை மத்திய அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டுமென்பதுடன், கிடைக்கக் கூடியவிடத்து, எது எவ்வாளுக்குச் சேர்ப்பிக்கப்பட்டதோ அவ்வாளினாற் கையொப்பமிடப்பட்ட ஏற்றுக்கொள்ளுதல் ஒன்றை அதனோடு சேர்த்தனுப்புதலும் வேண்டும்.

(4) கோரிக்கை எவ்வாள் தொடர்பானதோ அவ்வாளுக்கு அத்தகைய மன்றாணை அல்லது ஆவணம் உரியமுறையில் சேர்ப்பிக்கப்பட முடியாதிருப்பின், (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய மன்றாணை அல்லது ஆவணம் எந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதோ அந்த நீதிவான் நீதிமன்றம், (5) ஆம் உட்பிரிவுக்கமைய, அத்தகைய ஆளின் நடமாட்டங்கள் பற்றி நீதிமன்றம் அறிந்திருக்கின்றவாறான அத்தகைய தகவலைக் கொடுக்கின்ற கூற்றொன்றுடன், அத்தகைய மன்றாணையை அல்லது ஆவணத்தை மத்திய அதிகாரிக்குத் திருப்பியனுப்புதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆள் இலங்கையில் வதியவில்லையென மத்திய அதிகாரி திருப்திப்பட்டாலொழிய, அவர் அத்தகைய மன்றாணையை அல்லது ஆவணத்தை (1) ஆம் உட்பிரிவின்கீழ் கையாளுதலும் வேண்டும். அத்தகைய ஆள் இலங்கையில் வதியவில்லையென மத்திய அதிகாரி திருப்திப்படுமிடத்து, குறித்துரைக்கப்பட்ட நாட்டில் கோரிக்கையை விடுக்கின்ற தோதான அதிகாரிக்கு, அவர் அத்தகைய மன்றாணையை அல்லது ஆவணத்தைத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

(5) ஒராம் உட்பிரிவின்கீழ் மன்றாணை அல்லது ஆவணம் எந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதோ அந்த நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவான், அத்தகைய ஆள் இலங்கையில் இன்னுமொரு நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் வதிகின்றாரெனத் திருப்திப்படின், அவர், அந்த மற்றைய நீதிமன்றத்தின் நீதிவானுக்கு அத்தகைய மன்றாணையை அல்லது ஆவணத்தை அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன், அவர் அவ்வாறு செய்துள்ளாரென மத்திய அதிகாரிக்குத் தெரிவித்தலும் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் மன்றாணை அல்லது ஆவணம் எந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதோ அந்த நீதிவான் நீதிமன்றத்தின் நீதிவான், அது (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டது என்றாற்போன்று, மேற்கொண்டு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். கோரிக்கையானது எந்த ஆள் தொடர்பானதோ அந்த ஆளுக்கு அது சேர்ப்பிக்கப்பட்ட பின்னர், நீதிவான், அது எப்போது சேர்ப்பிக்கப்பட்டது என்பதைத் தருகின்ற சான்றிதழொன்றை மத்திய அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன், கிடைக்கக்கூடியவிடத்து, அது எவ்வாளுக்குச் சேர்ப்பிக்கப்பட்டதோ அவ்வாளினால் கையொப்பமிடப்பட்ட ஏற்றுக்கொள்ளுதலொன்றை அதனோடு சேர்த்தனுப்புதலும் வேண்டும்.

(7) மத்திய அதிகாரி, (3) ஆம் உட்பிரிவின்கீழான அல்லது (6) ஆம் உட்பிரிவின்கீழான சான்றிதழொன்றைப் பெற்றதன் மேல், கோரிக்கையை விடுக்கின்ற குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்கு அதனை அனுப்புதல் வேண்டும்.

(8) எவரேனுமாள் மீது (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் அத்தகைய ஏதேனும் மன்றாணையைச் சேர்ப்பித்தலானது, அதனோடு இணங்கியொழுகுவதற்கு இலங்கையின் சட்டத்தின்கீழ் அத்தகைய ஆள்மீது கடப்பாடெதனையும் சுமத்துதலாகாது.

குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டில் சேர்ப்பிப்பதற்காக மத்திய அதிகாரியினால் விடுக்கப்படும் கோரிக்கை.

9. (1) மத்திய அதிகாரி,—

(அ) தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட ஆளொருவர் இலங்கையிலுள்ள நீதிமன்றமொன்றில் தோன்றுவதனைத் தேவைப்படுத்துகின்ற ஓர் அழைப்பாணையை ; அத்துடன்

(ஆ) குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் சான்று கொடுக்கும் நோக்கத்துக்காக இலங்கையிலுள்ள நீதிமன்றமொன்றில் வருகைதருவதனைத் தேவைப்படுத்தி ஓர் அழைப்பாணையை அல்லது கட்டளையை

இலங்கையிலுள்ள ஒரு நீதிமன்றம் வழங்கும் அல்லது ஆக்கும் விடயத்தில், அத்தகைய ஆள் எந்தக் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் வதிகின்றாரோ அந்தக் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்கு குறித்துரைக்கப்பட்ட நாட்டில் அத்தகைய ஆளுக்கு அத்தகைய அழைப்பாணையை அல்லது கட்டளையைச் சேர்ப்பிக்கும்படி கோரிக்கை விடுக்கலாமென்பதுடன், அத்தகைய கோரிக்கையில் அத்தகைய அழைப்பாணை அல்லது கட்டளை சேர்ப்பிக்கப்படும் முறையையும் குறித்துரைக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் எந்தத் தோதான அதிகாரிக்கு கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளதோ, அந்தத் தோதான அதிகாரி, கோரிக்கையானது எந்த அழைப்பாணை அல்லது கட்டளை தொடர்பானதோ அந்த அழைப்பாணை அல்லது கட்டளை

அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டில் வதிகின்ற ஆளுக்குச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதெனத் தெரிவித்து, அத்தகைய சேர்ப்பிப்புப் பற்றி உரியமுறையில் சரியென உறுதிப்படுத்தப்பட்ட அறிக்கையொன்றை அனுப்புமிடத்து, மத்திய அதிகாரி, அத்தகைய அழைப்பாணையை அல்லது கட்டளையை வழங்குகின்ற அல்லது ஆக்குகின்ற நீதிமன்றத்துக்கு அத்தகைய அறிக்கையை அனுப்புவித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய அறிக்கை சான்றில் ஏற்கத்தகவுடையதாதலும் வேண்டும் ; அத்துடன் அதன்கண் அளிக்கப்பட்ட கூற்றுக்கள், முரணானது என காண்பிக்கப்படும்வரை சரியானவை எனக் கருதப்படுதலும் வேண்டும்.

## பாகம் IV

### சான்றெடுத்தலும், ஆவணங்களையும் அல்லது வேறு பொருள்களையும் காண்பித்தலும் தொடர்பாக உதவியளித்தல்

இலங்கையில் சான்றெடுக்கப்படுவதற்காகவும் ஆவணங்கள் முதலியன காண்பிக்கப்படுவதற்காகவும் குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டினால் விடுக்கப்படும் கோரிக்கை.

**10.** (1) குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் குற்றவியல் கருமமொன்றுடன் தொடர்பான வழக்கு நடவடிக்கையொன்றின் நோக்கங்களுக்காக —

(அ) இலங்கையில் சான்றெடுக்கப்பட வேண்டுமென்று ; அல்லது

(ஆ) இலங்கையில் உள்ள ஆவணங்கள் அல்லது வேறு பொருட்கள் காண்பிக்கப்பட வேண்டுமென்று,

குறித்துரைக்கப்பட்ட நாட்டின் நேர்தகுதியான அதிகாரி மத்திய அதிகாரிக்கு கோரிக்கையொன்றை விடுக்குமிடத்து, மத்திய அதிகாரி, அவரது தற்றுணிபில் அத்தகைய சான்றை எடுப்பதற்கு அல்லது அத்தகைய ஆவணங்களை அல்லது பொருள்களைப் பெறுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரினால் ஆக்கப்பட்ட பொதுவான அல்லது விசேடமான கட்டளையொன்றின்மூலம் அதிகாரமளிக்கப்பட்ட நீதிவானொருவருக்கு, அத்தகைய கோரிக்கையை ஆற்றுப்படுத்தலாமென்பதுடன், அத்தகைய நீதிவானிடமிருந்து அத்தகைய சான்றை, ஆவணங்களை அல்லது பொருள்களைப் பெற்றதன்மேல் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் நேர்தகுதியான அதிகாரிக்கு அவற்றை அனுப்புதலும் வேண்டும்.

(2) குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் தோதான அதிகாரியினால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விடுக்கப்படும் ஒவ்வொரு கோரிக்கையும், விடயத்தின் சூழ்நிலைகள் அனுமதிக்குமளவுக்குப் பின்வருவனவற்றைக் குறித்துரைத்தல் வேண்டும் :—

(அ) விசாரணை செய்யப்படவுள்ள சாட்சிகளின் பெயர்களும், முகவரிகளும் அல்லது அதுவலைப் முறையான பதவிப்பெயர்களும் ;

(ஆ) சாட்சிகளிடம் கேட்கப்படவுள்ள கேள்விகளும் அல்லது எந்த விடயப்பொருள் பற்றி அவர்கள் விசாரணை செய்யப்படவுள்ளனரோ அந்த விடயப்பொருளும் ;

(இ) சாட்சிகள் வாய்மொழி மூலமாகவோ அல்லது எழுத்திலோ விசாரணை செய்யப்படுவது விரும்பத்தக்கது என்பது ;

(ஈ) கோரிக்கைகளுக்கு இயைபாகத் தோன்றுகின்ற சான்றைக் கொடுக்காதிருப்பதற்கான சிறப்புரிமைகளும் அல்லது விலக்களிப்புகளும் பற்றிக் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் சட்டத்தினது ஏதேனும் ஏற்பாடு ;

(உ) குறித்துரைக்கப்பட்ட நாட்டில் சான்றின் ஏற்புடைமைக்கு இயைபாகச் சான்றெடுக்கும் முறை பற்றி அந்நாட்டின் சட்டத்தினது எவையேனும் விசேடமான தேவைப்பாடுகள் ; அத்துடன்

(ஊ) ஓர் ஆவணத்தின் மூலப்பிரதி காண்பிக்கப்படுவது விரும்பப்படுகிறதா அல்லது ஆவணத்தின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று போதியதாக விருக்குமா என்பது.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் சான்றெடுத்தல் அல்லது ஆவணங்களை அல்லது வேறு பொருள்களைக் காண்பித்தல் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவிடத்து —

(அ) அதிகாரவளிப்பிற் குறித்துரைக்கப்பட்ட நீதிவான், அத்தகைய கருமம் தொடர்பாகச் சான்று அளிப்பதற்கு அத்தகைய நீதிவான் முன்னர் தோன்றுகின்ற ஒவ்வொரு சாட்சியினதும் சான்றைச் சத்தியத்தின்மாது எடுக்கலாம் ; அத்துடன் அத்தகைய நீதிவான் —

(i) சான்றை எழுத்தில் எடுக்கச் செய்வித்து, சான்றானது அத்தகைய நீதிவானினால் எடுக்கப்பட்டதென அத்தாட்சிப்படுத்தலும் வேண்டும் ; அத்துடன்

(ii) அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்பட்ட சான்றை மத்திய அதிகாரிக்கு அனுப்பச் செய்தல் வேண்டும் ;

(ஆ) நீதிவானொருவர், ஆவணங்கள் அல்லது வேறு பொருள்கள் தம்முன்னர் காண்பிக்கப்படுவதனைத் தேவைப்படுத்தலாமென்பதுடன், ஆவணங்கள் அல்லது வேறு பொருள்கள் அவ்வாறு காண்பிக்கப்படுமிடத்து, நீதிவான், அந்த ஆவணங்களை மத்திய அதிகாரிக்கு அனுப்புதலும் வேண்டும் அல்லது மத்திய அதிகாரிக்கு அத்தகைய ஆவணங்களை அனுப்புவது நடைமுறைச் சாத்திய மற்றதாகவிருக்குமிடத்து, அல்லது கோரிக்கையானது அத்தகைய ஆவணங்கள் பிரதிகளுடன் மட்டுமே தொடர்புபடுமிடத்து, விடயத்துக்கேற்ப உண்மைப் பிரதிகளென, நீதிவானினால் அத்தாட்சிப்படுத் தப்பட்ட அத்தகைய ஆவணங்களின் பிரதிகளை, அல்லது ஏனைய பொருள்களை மத்திய அதிகாரிக்கு அனுப்புதல் வேண்டும்.

(4) எவரேனும் சாட்சியின் சான்று, குறித்துரைக்கப்பட்ட நாட்டில் வழக்கு நடவடிக்கை எவ்வாள் தொடர்பானதோ அவ்வாளின் அல்லது அவளின் சட்டப்பிரதிநிதி எவருமிருப்பின் அவளின் முன்னிலையில் அல்லது அவர் இல்லாதிருக்கையில் எடுக்கப்படலாம்.

(5) மூன்றாம் உட்பிரிவின் கீழ் வழக்கு நடவடிக்கையொன்றை நடாத்துகின்ற நீதிவான், நீதிவானின் முன்னரான வழக்கு நடவடிக்கையில் சட்டப்பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருப் பதற்கு —

(அ) குறித்துரைக்கப்பட்ட நாட்டிலான வழக்கு நட வடிக்கை எவ்வாள் தொடர்பானதோ அவ்வாளை ;

(ஆ) குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதி காரியை,

அனுமதித்தல் வேண்டும்.

(6) மூன்றாம் உட்பிரிவின் கீழான நீதிவானின் சான்றிதழ், அவ்வுட்பிரிவின்கீழ் நடாத்தப்பட்ட வழக்கு நடவடிக்கைகளில் சட்டப்பிரதிநிதித்துவம் அனுமதிக்கப்பட்டதாவென்பதும், பின்வரும் ஆட்களுள் எவரும் சான்றெடுக்கப்பட்ட நேரத்தில் அல்லது ஆவணங்கள் அல்லது வேறு பொருள்கள் காண்பிக்கப்பட்ட நேரத்தில் சமுகமளித்திருந்தனராவென்பதும் கூறுதல் வேண்டும் :–

(அ) குறித்துரைக்கப்பட்ட நாட்டிலான வழக்கு நடவடிக்கை எவ்வாள் தொடர்பானதோ அவ்வாள் அல்லது அவரது சட்டப்பிரதிநிதி, எவருமிருப்பின் அவர் ;

(ஆ) சான்றளிக்கும் அல்லது ஆவணங்களை அல்லது வேறு பொருள்களைக் காண்பிக்கும் வேறெவரேனுமாள் அல்லது அவரது சட்டப்பிரதிநிதி எவருமிருப்பின் அவர்.

(7) சாட்சிகள் வருகைதருவதனையும், சாட்சிகளினால் ஆவணங்கள் காண்பிக்கப்படுவதனையும் கட்டாயப்படுத்துதல் தொடர்பான 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாடுகள், அத்தகைய சான்றையெடுப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நீதிவான் நீதிமன்றம் தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

(8) மத்திய அதிகாரி, (3) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்கு அனுப்பப்பட்ட நீதிவானின் சான்றிதழைக் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்கு அனுப்புவித்தல் வேண்டும்.

(9) குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டில் குற்றவியல் கருமமொன்று தொடர்பான ஒரு வழக்கு நடவடிக்கையின் நோக்கங்களுக்காகச் சான்றளிப்பதற்கு, அல்லது ஆவணங்களை அல்லது வேறு பொருள்களைக் காண்பிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற ஆளொருவர், குறித்துரைக்கப்பட்ட நாட்டில் அத்தகைய வழக்கு நடவடிக்கையில், விடயத்துக்கேற்ப, எந்தக் கேள்விக்கு மறுமொழியிறுப்பதற்கு அல்லது எந்த ஆவணத்தை அல்லது பொருளைக் காண்பிப்பதற்கு அவ்வாள் கட்டாயப்படுத்தப்படாதுள்ளாரோ அந்தக் கேள்வியொன்றுக்கு மறுமொழியிறுப்பதற்கோ அல்லது ஓர் ஆவணத்தை அல்லது பொருளைக் காண்பிப்பதற்கோ கட்டாயப்படுத்தப்படுதலாகாது.

(10) உரிய முறையில் சரியென உறுதிப்படுத்தப்பட்ட வெளிநாட்டுச் சட்ட விடுபாட்டுரிமைச் சான்றிதழ், அத்தகைய சான்றிதழிற் கூறப்பட்ட கருமங்கள் பற்றி முதற்றோற்றச் சான்றாக இப்பிரிவின் கீழான வழக்கு நடவடிக்கைகளில் ஏற்புடையதாதல் வேண்டும். ஆனால் தோதான அதிகாரியின் சம்மதமின்றி, கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட குற்றவியற் கருமத்தின் நோக்கங்களுக்காகவன்றி வேறேதேனும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படுதலாகாது.

11. (1) மத்திய அதிகாரி, இலங்கையில் குற்றவியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்ற ஒரு நீதிமன்றத்தின் கோரிக்கையின்பேரில், அந்நீதிமன்றத்திலான குற்றவியல் கருமமொன்று தொடர்பான வழக்கு நடவடிக்கைகளின் நோக்கங்களுக்காக :—

(அ) குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டில் சான்றெடுக்கப்படுவதற்காக ; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டில் ஆவணங்கள் அல்லது வேறு பொருள்கள் காண்பிக்கப்படுவதற்காக,

ஒழுங்குசெய்யுமாறு குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்கு கோரிக்கை விடுக்கலாம்.

குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டில் சான்றெடுக்கப்படுவதற்காகவும் ஆவணங்கள் முதலியன காண்பிக்கப்படுவதற்காகவும் மத்திய அதிகாரியினால் விடுக்கப்படும் கோரிக்கை.

(2) மத்திய அதிகாரி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரினால் விடுக்கப்பட்ட கோரிக்கையொன்றைப் பின்பற்றி, குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டிலுள்ள தோதான அதிகாரியிடமிருந்து —

(அ) அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டில் எடுக்கப்பட்ட ஏதேனும் சான்றை ;

(ஆ) அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டில் காண்பிக்கப்பட்ட ஏதேனும் ஆவணத்தை அல்லது வேறு பொருள்களைப்

பெறுகின்றவிடத்து, அத்தகைய சான்று, ஆவணம் அல்லது பொருள், அத்தகைய கோரிக்கை எந்த வழக்கு நடவடிக்கை தொடர்பானதோ அந்த ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் ஏற்புடையதாதல் வேண்டும். ஆனால், அத்தகைய தோதான

அதிகாரியின் சம்மதமின்றி, அத்தகைய கோரிக்கையில் குறித்துரைக்கப்பட்ட குற்றவியற் கருமத்தின் நோக்கங்களுக்காவன்றி வேறேதேனும் நோக்கத்துக்காகப் பயன்படுத்தப் படுதலாகாது.

## பாகம் V

### ஆட்கள் சான்று அளிப்பதற்கான அல்லது புலனாய்வுகளில் உதவியளிப்பதற்கான ஒழுங்குகள்

இலங்கையிலுள்ள கைதி சான்றளிப்பதற்காக அல்லது புலனாய்வில் உதவியளிப்பதற்காகக் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றினால் கோரிக்கை விடுக்கப்படுதல்.

**12.** (1) குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டில் குற்றவியல் கருமமொன்று தொடர்பான வழக்கு நடவடிக்கையொன்று அல்லது புலனாய்வொன்று தொடங்கியுள்ளவிடத்து, அந்தக் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரி, இலங்கையிலுள்ள கைதியொருவர், விடயத்துக்கேற்ப, அத்தகைய வழக்கு நடவடிக்கைக்கு இசைவாகச் சான்றளிப்பதற்கு அல்லது அத்தகைய புலனாய்வு தொடர்பாக உதவியளிப்பதற்கு இயன்றவாறாக உள்ளாரென அபிப்பிராயங்கொண்டு, விடயத்துக்கேற்ப, அத்தகைய வழக்கு நடவடிக்கை சம்பந்தமான கேட்பொன்றில் சான்றளிக்கும் அல்லது அத்தகைய புலனாய்வு தொடர்பாக உதவியளிக்கும் நோக்கங்களுக்காக அத்தகைய கைதியை அகற்றுமாறு கோரிக்கை விடுக்குமிடத்து, மத்திய அதிகாரி —

(அ) விடயத்துக்கேற்ப, அத்தகைய ஆள் அத்தகைய வழக்கு நடவடிக்கையில் சான்றளிப்பதற்கு அல்லது அத்தகைய புலனாய்வு தொடர்பாக உதவியளிக்கும் நோக்கங்களுக்காக அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்கு அகற்றப்படுவதற்குச் சம்மதமளித்துள்ளாரெனவும் ; அத்துடன்

(ஆ) குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்குக் கைதியின் பயணச் செலவுகளை ஈடுசெய்வது பற்றியும் அத்தகைய கைதி குறித்துரைக்கப்பட்ட நாட்டில் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படும் காலப்பகுதி பற்றியும் ஆன பொறுப்பேற்புகள் உட்பட, அத்தகைய கைதி தொடர்பில், மத்திய அதிகாரியினால் தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் பொறுப்பேற்புகளைக் குறித்துரைக்கப்பட்ட நாடு கொடுத்துள்ளதெனவும்

அவர் திருப்திப்படின், குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்கு அகற்றப்படும் நோக்கங்களுக்காக அத்தகைய கைதியை மறியற்சாலையிலிருந்து விடுவிப்பு செய்யும்படி எழுத்திற் பணிக்கலாம் என்பதுடன், குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்கு அத்தகைய கைதி பயணஞ்செய்வதற்கான ஒழுங்குகளையும் செய்யலாம்.

(2) கைதியொருவர் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழான மந்திரி அதிகாரியின் பணிப்பொன்று பின்வருவனவற்றுக்கு அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் :—

(அ) அத்தகைய கைதி எந்த மறியற்சாலையில் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுகின்றாரோ அம் மறியற்சாலையிலிருந்து அவரை விடுவித்து, அத்தகைய கைதியை, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே, மறியற்சாலை அலுவலரொருவரின் கட்டுக்காப்பில், அத்தகைய கைதியை அகற்றுமாறு வேண்டுகோள் விடுக்கின்ற குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரியைப் பிரதிநிதித்துவம் வகிக்கின்ற ஆளொருவரின் கட்டுக்காப்பினுள் ஒப்படைத்தல் ;

(ஆ) மறியற்சாலை அலுவலரொருவரின் கட்டுக்காப்பில் கைதியை இலங்கைக்கு மீண்டும் கொண்டுவந்து, குறித்துரைக்கப்பட்ட நாட்டுககு அகற்றும் நோக்கங்களுக்காக அவர் எந்த மறியற்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டாரோ அந்த மறியற்சாலையின் கட்டுக்காப்பினுள் அவரை ஒப்படைத்தல்.

(3) இலங்கையில் மறியற்றண்டனைக் காலப்பகுதியை அனுபவித்துக்கொண்டிருந்த கைதியொருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றினால் விடுக்கப்படும் கோரிக்கையைப் பின்பற்றி மறியற்சாலையிலிருந்து விடுவிக்கப்படுமிடத்து, அத்தகைய கோரிக்கை சம்பந்தமாக அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டில் அத்தகைய கைதி எக்காலப் பகுதியின்போது கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுகின்றாரோ அக்காலப்பகுதி, ஏதேனும், குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்கு அகற்றப்படுவதற்காக அவர் விடுக்கப்படுவதற்கு முன்னர் எந்த மறியற்றண்டனைக் காலப்பகுதியை அனுபவித்துக் கொண்டிருந்தாரோ அந்த மறியற்றண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்த காலப்பகுதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) (அ) ஒரு குற்றவியல் கருமம் தொடர்பான வழக்கு நடவடிக்கையொன்று அல்லது புலனாய்வொன்று குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் தொடங்கியுள்ள விடத்து ;

(ஆ) விடயத்துக்கேற்ப, அந்த வழக்கு நடவடிக்கை சம்பந்தமான கேட்பொன்றில் அல்லது அத்தகைய புலனாய்வு தொடர்பாக உதவியளிக்கும் நோக்கங்களுக்கான இலங்கையிலுள்ள (கைதியொருவராயிராத) ஆளொருவரை வருகைதரும்படி குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள தோதான அதிகாரி கோரிக்கை விடுக்குமிடத்து ;

(இ) விடயத்துக்கேற்ப அத்தகைய வழக்கு நடவடிக்கைக்கு இயைபான சான்றை அளிப்பதற்கு, அல்லது அத்தகைய புலனாய்வு தொடர்பாக உதவியளிப்பதற்கு அவ்வாள் இயன்றவராகவுள்ளாரென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்து ; அத்துடன்

(ஈ) (i) விடயத்துக்கேற்ப, அத்தகைய வழக்கு நடவடிக்கையில் சான்றளிப்பதற்கு அல்லது அத்தகைய புலனாய்வு தொடர்பாக உதவியளிப்பதற்கு அத்தகைய ஆள் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்குப் பயணஞ் செய்வதற்குச் சம்மதித்துள்ளாரென்றும் ; அத்துடன்

(ii) குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள தோதான அதிகாரி, குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்கு அத்தகைய ஆளின் பயணச்செலவுகளை ஈடுசெய்வது பற்றிய பொறுப்பேற்புகள் உட்பட, அத்தகைய ஆள் தொடர்பில் மத்திய அதிகாரியினால் தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் பொறுப்பேற்பைக் கொடுத்துள்ளாரென்றும்,

மத்திய அதிகாரி திருப்திப்படுமிடத்து,

மத்திய அதிகாரி, அவரது தற்றுணிபில், குறித்துரைக்கப்பட்ட நாட்டுக்கு அவ்வாள் பயணஞ்செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்யலாம்.

குறித்துரைக்கப்பட்ட நாட்டில் உள்ள கைதி அல்லது வேறு ஆள் சான்றளிப்பதற்கு அல்லது புலனாய்வொன்றில் உதவியளிப்பதற்கு மத்திய அதிகாரியினால் விடுக்கப்படும் கோரிக்கை

**13.** (1) ஒரு குற்றவியல் கருமம் தொடர்பான வழக்கு நடவடிக்கை அல்லது புலனாய்வு இலங்கையில் தொடங்கியுள்ள விடத்து, குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டிலுள்ள ஆளொருவர்—

(அ) அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டில் கைதி யொருவராகவுள்ளாரெனவும் ;

(ஆ) விடயத்துக்கேற்ப, அவ்வழக்கு நடவடிக்கைக்கு இயைபான சான்றையளிப்பதற்கு அல்லது அத்த கைய புலனாய்வு தொடர்பாக உதவியளிப்பதற்கு இயன்றவராகவுள்ளாரெனவும் ; அத்துடன்

(இ) விடயத்துக்கேற்ப, அத்தகைய வழக்கு நடவடிக்கை யில் சான்றளிக்கும் அல்லது அத்தகைய புலனாய்வு தொடர்பாக உதவியளிக்கும் நோக்கங்களுக்காக இலங்கைக்கு அகற்றப்படுவதற்கு அவரது சம்மதத் தைக் கொடுத்துள்ளாரெனவும், அல்லது கொடுக்கக் கூடிய சாத்தியம்கொண்டவரெனவும்,

மத்திய அதிகாரி அபிப்பிராயப்படுமிடத்து, மத்திய அதிகாரி, அவரது தற்றுணிபில், விடயத்துக்கேற்ப அந்த வழக்கு நடவடிக்கை சம்பந்தமான கேட்போன்றில் சான்றளிப்பதற்கென அல்லது அத்தகைய புலனாய்வு தொடர்பாக உதவியளிப்பதற் கென அத்தகைய ஆளை இலங்கைக்கு அகற்றுவதனை அதிகாரமளிக்கும்படி குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள தோதான அதிகாரிக்கு கோரிக்கை விடுக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் மத்திய அதிகாரியினால் செய்யப்பட்ட கோரிக்கை ஒன்றைப் பின்பற்றி, குறித்துரைக்கப் பட்ட ஒரு நாட்டிலிருந்து இலங்கைக்கு அகற்றப்படும் ஆள் ஒருவர், அத்தகைய கோரிக்கையைப் பின்பற்றி அத்தகைய ஆள் இலங்கையில் இருக்கையில் அல்லது இலங்கைக்கு அல்லது இலங்கையிலிருந்து பயணஞ்செய்கையில், மத்திய அதிகாரி எழுத்திற் பணிக்கக்கூடியவாறான அத்தகைய கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுதல் வேண்டும். இவ்வுட்பிரிவின் கீழ் விடுக்கப்படும் பணிப்பொன்று, அத்தகைய பணிப்பு எவ்வாள் தொடர்புபட்டதோ அவ்வாளைக் கட்டுக்காப்பில் வைத்திருப்பதனை அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இலங்கையிலுள்ள ஒரு மறியற்சாலையில் மறியற்றண்டனைக்குட்பட்ட ஆட்களின் மறியற்றண்டனை நிபந்தனைகள், மறியற்றண்டனையின்போது அவர்களை நடாத்தும்முறை, மற்றும் ஒரு மறியற்சாலையிலிருந்து இன்னொரு மறியற்சாலைக்கு இடமாற்றுதல் என்பன தொடர்பான மறியற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், (2) ஆம் உட்பிரிவின் கீழ் மத்திய அதிகாரியினால் விடுக்கப்படும் பணிப்பொன்றைப் பின்பற்றிக் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படும் ஆளொருவர் தொடர்பாக அவை ஏற்புடையப்பாலனவாக இருக்கும் அளவுவரை ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) (அ) (2) ஆம் உட்பிரிவின் கீழ் மத்திய அதிகாரியினால் விடுக்கப்படும் பணிப்பொன்றைப் பின்பற்றி ஆளொருவர் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுமிடத்தும் ; அத்துடன்

(ஆ) அத்தகைய ஆள் எந்தக் குறித்துரைக்கப்பட்ட நாட்டில் இருந்து இலங்கைக்கு அகற்றப்பட்டாரோ அந்தக் குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள தோதான அதிகாரி, அத்தகைய ஆளைக் கட்டுக்காப்பிலிருந்து விடுவிக்குமாறு கோரிக்கை விடுக்குமிடத்தும்,

மத்திய அதிகாரி, அத்தகைய ஆள் கட்டுக்காப்பிலிருந்து விடுவிக்க வேண்டுமெனப் பணித்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின் கீழ் மத்திய அதிகாரியினால் விடுக்கப்பட்ட கோரிக்கையொன்றினைப் பின்பற்றி, இலங்கையில் கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுகையில் சட்டமுறையான கட்டுக்காப்பிலிருந்து தப்பிப் போகின்ற எவரேனுமாள், இச்சட்டத்தின் கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறையான விளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாண்டுகளுக்கு மேற்படாத கடூழிய மறியற்றண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

(6) ஒரு குற்றவியற் கருமமொன்றுடன் தொடர்பாக வழக்கு நடவடிக்கை அல்லது புலனாய்வொன்று இலங்கையில் தொடங்கியுள்ளவிடத்து குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டிலுள்ள (கைதியொருவரல்லாத) ஆளொருவர் —

(அ) விடயத்துக்கேற்ப, அவ்வழக்கு நடவடிக்கையில் இயைபாகச் சான்றிதளிப்பதற்கு, அல்லது அத்தகைய புலனாய்வு தொடர்பாக உதவியளிப்பதற்கு இயன்றவராகவுள்ளாரெனவும் ; அத்துடன்

(ஆ) விடயத்துக்கேற்ப, அத்தகைய வழக்கு நடவடிக்கையில் சான்றளிப்பதற்கு அல்லது அத்தகைய புலனாய்வு தொடர்பாக உதவியளிப்பதற்கு இலங்கைக்குப் பயணஞ் செய்வதற்குச் சம்மதித்துள்ளாரெனவும்,

மத்திய அதிகாரி அபிப்பிராயப்படுகின்றவிடத்து, மத்திய அதிகாரி அவரது தற்றுணிபில், அவ்வாள் இலங்கைக்குப் பயணஞ் செய்வதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்கு கோரிக்கை விடுக்கலாம்.

**14.** ஒரு குற்றவியல் கருமம் தொடர்பான வழக்கு நடவடிக்கையொன்றில் சான்றளிப்பதற்கு அல்லது ஒரு குற்றவியற் கருமம் தொடர்பான புலனாய்வொன்று தொடர்பாக உதவியளிப்பதற்கு — இலங்கைக்குக் கொண்டு வரப்படுகின்ற ஆட்கள். குற்றவழக்குத் தொடுப்பு முதலியவற்றில் இருந்து பிணிப்பின்மை உடையவர்களாயிருத்தல்.

(அ) 13 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் தோதான அதிகாரிக்கு மத்திய அதிகாரியினால் விடுக்கப்படும் கோரிக்கையொன்றினைப் பின்பற்றி ஆளொருவர் இலங்கையில் உள்ளவிடத்து ; அல்லது

(ஆ) கைதியாகவுள்ள ஆளொருவர், 13 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் தோதான அதிகாரிக்கு மத்திய அதிகாரியினால் விடுக்கப்படும் கோரிக்கையொன்றைப் பின்பற்றி இலங்கைக்கு அகற்றப்பட்டுள்ளவிடத்து,

அத்தகைய ஆள் அத்தகைய கோரிக்கையைப் பின்பற்றி அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டிலிருந்து புறப்படுமுன்னர் —

(i) கைதியொருவராகவிராத, ஒரு குற்றவியல் கருமம் தொடர்பான வழக்கு நடவடிக்கையொன்றில் சான்றளிக்கும் அல்லது ஒரு குற்றவியல் கருமம்

தொடர்பான புலனாய்வொன்றில் உதவியளிக்கும் நோக்கங்களுக்காக இலங்கையில் உள்ள ஆளொருவரின் விடயத்தில் அத்தகைய ஆள், அவரது சமூகம் அத்தகைய வழக்கு நடவடிக்கைக்கு அல்லது புலனாய்வுக்கு இனிமேலும் அவசியமானதல்லவென அவருக்கு மத்திய அதிகாரியினால் அறிவிக்கப்பட்ட பின்னர் ஆகக் குறைந்தது பதினைந்து நாட் காலப்பகுதிக்கேனும் இலங்கையில் இருந்ததுடன், இலங்கையை விட்டுச் செல்வதற்கான சந்தர்ப்பமும் அவருக்கு இருந்திருந்தாலொழியவும் ; அத்துடன்

(ii) கைதியொருவராகவிருந்து, ஒரு குற்றவியற் கருமம் தொடர்பான வழக்கு நடவடிக்கையொன்றில் சான்றளிக்கும் அல்லது ஒரு குற்றவியற் கருமம் தொடர்பான புலனாய்வொன்றில் உதவியளிக்கும் நோக்கங்களுக்காக இலங்கையிலுள்ள ஆளொருவரின் விடயத்தில், அவர் எந்தக் குறித்துரைக்கப்பட்ட நாட்டிலிருந்த இலங்கைக்கு அகற்றப்பட்டாரோ அந்த குறிப்பிட்ட நாட்டுக்குத் திரும்பிய பின்னர் வரையும்,

புரியப்பட்டுள்ளதாகச் சார்த்தப்படும் அல்லது புரியப்படும் ஏதேனும் தவறுக்காக இலங்கையில் அவ்வாள் தடுத்து வைக்கப்படுதலோ, அவருக்கெதிராகக் குற்ற வழக்குத் தொடுக்கப்படுதலோ அல்லது அவருக்குத் தண்டனையளிக்கப்படுதலோ ஆகாது.

## பாகம் VI

### தேடுகையும் கைப்பற்றுகையும் தொடர்பான உதவி

தேடுகைக்கும் கைப்பற்றுகைக்குமான குறித்துரைக்கப்பட்ட நாடொன்றினால் விடுக்கப்படும் கோரிக்கை.

**15.** (1) (அ) பாரதூரமானதொரு தவறு சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள குற்றவியற் கருமமொன்று தொடர்பான வழக்கு நடவடிக்கை அல்லது புலனாய்வொன்று குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டில் தொடங்கியுள்ளவிடத்தும் ;

(ஆ) அவ்வழக்கு நடவடிக்கைக்கு அல்லது அப்புலனாய்வுக்கு இயைபான பொருள் ஒன்று இலங்கையில் காணப்படுகின்றதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளவிடத்தும், அத்துடன்

(இ) அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டின் மேலதிகாரி. அப்பொருள் தொடர்பாகத் தேடுதல் ஆணையொன்றை வழங்குமாறு ஒழுங்குசெய்வதற்கு மத்திய அதிகாரியிடம் கோரிக்கை விடுக்குமிடத்தும்.

மத்திய அதிகாரி, அவரது கருத்தின்படி எந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினுள் அந்தப் பொருள் உள்ளதாக நம்பப் படுகின்றதோ, அந்த நீதிவான் நீதிமன்றத்துக்கு, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டின் மேலதிகாரிகளினால் விடுக்கப்பட்ட தேடுதல் ஆணைக்கான விண்ணப்பம் ஒன்றைச் செய்வதற்கான ஒரு பொலிசு அலுவலருக்கு எழுத்தில் அதிகார மளிக்கலாம்.

(2) கோரிக்கை எந்தப்பொருள் தொடர்பிலானதோ அந்தப் பொருள் குறித்துரைக்கப்பட்ட ஒரு நேரத்தில் —

(அ) ஆளொருவரால் அணியப்படும் ஆடையில் ; அல்லது

(ஆ) வேறு வகையில் ஆளொருவரின் உடனடிக் கட்டுப் பாட்டில்,

இருக்கின்றதென அல்லது இருக்கவேண்டுமென நம்புவதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட பொலிசு அலுவல ருக்குக் காரணமிருக்குமிடத்து, பொலிசு அலுவலர்,

(i) அத்தகைய நம்பிக்கைக்கான ஏதுக்களைக் காட்டி, அத்தகைய தகவலை சத்தியத்தின்மீது அத்தகைய நீதிவானின் முன்வைக்கலாம் ; அத்துடன்

(ii) அப்பொருளுக்காக அத்தகைய ஆளைத் தேடுகை செய்வதற்கு இப்பிரிவின்கீழ் ஆணை ஒன்று வழங்கு வதற்காக விண்ணப்பிக்கலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து, நீதிவான் (6) ஆம் உட்பிரிவுக்கமைய —

(அ) அத்தகைய பொருளுக்காக ஆளை தேடுகை செய்வ தற்கு ; அத்துடன்

(ஆ) கைப்பற்றப்படுவதற்கு ஆணையால் அதிகாரமளிக்கப்பட்டதும், நியாயமான ஏதுக்களின்மீது வழக்கு நடவடிக்கைக்கு அல்லது புலனாய்வுக்கு இயைபானதென பொலிசு அலுவலர் நம்புகின்றதும் தேடுகையின்போது காணப்பட்டதுமான எதனையும் கைப்பற்றுவதற்கு.

அவசியமானதும் நியாயமானதுமான அத்தகைய உதவியுடனும் அத்தகைய வலுவுடனும் பொலிசு அலுவலருக்கு (ஆணையில் பெயர் குறிப்பிட்டாலுஞ் சரி, அல்லாவிடினுஞ்சரி) அதிகாரமளிக்கும் ஆணையொன்றை வழங்கலாம்.

(4) கோரிக்கை எப்பொருள் தொடர்புற்றதோ அப்பொருள் குறித்துரைக்கப்பட்ட ஒரு நேரத்தில் ஏதேனும் காணியில் அல்லது எவையேனும் வளவுகள்மீது அல்லது வளவுகளில் இருக்கின்றது அல்லது இருக்கவேண்டும் என நம்புவதற்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட பொலிசு அலுவலருக்குக் காரணமாயிருக்குமிடத்து, பொலிசு அலுவலர் —

(அ) அத்தகைய நம்பிக்கைக்கான ஏதுக்களைக் குறிப்பிட்டு அத்தகைய தகவலை சத்தியத்தின்மீது அத்தகைய நீதிவானின் முன் வைக்கலாம் ;

(ஆ) அப்பொருளுக்காக காணியை அல்லது வளவுகளைத் தேடுகை செய்வதற்கு இப்பிரிவின்கீழ் ஆணை ஒன்று வழங்கப்படுவதற்காக விண்ணப்பிக்கலாம்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து, நீதிவான், (6) ஆம் உட்பிரிவிற்கமைய —

(அ) அக்காணியின்மீது அல்லது வளவுகள்மீது அல்லது வளவுகளில் பிரவேசிப்பதற்கு ;

(ஆ) அத்தகைய பொருளுக்காக காணியை அல்லது வளவுகளை தேடுகை செய்வதற்கு ; அத்துடன்

(இ) கைப்பற்றுவதற்கு ஆணையால் அதிகாரமளிக்கப்பட்டதும் நியாயமான ஏதுக்களின்மீது வழக்கு நடவடிக்கைக்கு அல்லது புலனாய்வுக்கு இயைபானதென பொலிசு அலுவலர் நம்புகின்றதும் தேடுகையின் போது காணப்பட்டதுமான எதனையும் கைப்பற்றுவதற்கு.

அவசியமானதும் நியாயமானதுமான அத்தகைய உதவியுடனும் அத்தகைய வலுவுடனும் பொலிசு அலுவலருக்கு (ஆணையில் பெயர்குறிப்பிடப்பட்டாலுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி) ஆணையொன்றை வழங்கலாம்.

(6) நீதிவானொருவர் —

(அ) எந்த ஏதுக்களின்மீது ஆணை வழங்கப்படவேண்டுமென நாடப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் தொடர்பாக நீதிவான் தேவைப்படுத்தக்கூடியவாறு, அத்தகைய மேலதிகத் தகவல் ஏதுமிருப்பின் அத்தகைத் தகவல் தருபவர் அல்லது வேறு எவரேனும் ஆள் வாய்மொழியாகவோ அல்லது சத்தியக்கடதாசி மூலமோ நீதிவானுக்குக் கொடுத்திருந்தாலன்றியும் ; அத்துடன்

(ஆ) ஆணையை வழங்குவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளன என நீதிவான் திருப்தியுற்றாலன்றியும்,

இப்பிரிவின்கீழ் ஆணையொன்றை வழங்குதலாகாது.

(7) இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் ஆணையொன்றில் —

(அ) எக்குற்றவியல் கருமம் தொடர்பாக தேடுகைக்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்குற்றவியல் கருமத்தின் இயல்பைப்பற்றிய குறிப்பீடொன்று உட்பட, ஆணை வழங்கப்படுவதற்கான நோக்கம்;

(ஆ) தேடுகை பகலில் அல்லது இரவில் ஏதேனும் நேரத்திலா அல்லது பகலில் அல்லது இரவில் குறித்துரைக்கப்பட்ட நேரங்களிலா அதிகாரமளிக்கப்பட்டுள்ளது ;

(இ) கைப்பற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பொருள் வகையின் விவரணமொன்று ; அத்துடன்

(ஈ) ஆணையின் பயன் அற்றுப்போகும் தேதி (ஆணை வழங்கப்பட்டதன் பின்னர் ஒரு மாதத்திற்குப் பிந்தாமல்)

என்பன குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(8) ஆணையில் குறித்துரைக்கப்பட்ட வகையிலானதான எதற்கும், இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணையொன்றின்கீழான தேடுகையொன்றின்போது, பொலிசு அலுவலர் —

(அ) குறித்துரைக்கப்பட்ட நாட்டில் வழக்கு நடவடிக்கைக்கு அல்லது புலனாய்வுக்கு அல்லது இலங்கையில் தவறொன்று புரியப்பட்டமை தொடர்பில் சான்றளிப்பதற்கு இயைபுடையதாயிருப்பதான ; அத்துடன்

(ஆ) அது கைப்பற்றப்படாவிடில் மறைத்து வைக்கப்படக் கூடிய, காணாமற்போகக்கூடிய அல்லது அழிக்கப்படக்கூடிய சாத்தியமுள்ளதான

நியாயமான ஏதுக்களின்மீது நம்புகின்ற வேறு எதேனும் பொருளை அத்தகைய பொலிசு அலுவலர் காண்பாராயின், ஆணை, அத்தகைய வேறு பொருளை கைப்பற்றுவதற்குப் பொலிசு அலுவலருக்கு அதிகாரமளிப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(9) இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணையொன்றிற்கிணங்க, தேடுகையொன்றின் விளைவாக பொலிசு அலுவலர் ஒருவர், குறித்துரைக்கப்பட்ட நாட்டில் வழக்கு நடவடிக்கைக்கு அல்லது புலனாய்வுக்கு இயைபானதாக இருப்பதான நியாயமான ஏதுக்களின்மீது, அத்தகைய பொலிசு அலுவலர் நம்புகின்ற வேறு ஏதேனும் பொருளைக் காணுமிடத்து, அத்தகைய பொலிசு அலுவலர் அத்தகைய பொருளை இலங்கையின் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் கட்டுக்காப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் ஒப்படைத்தல் வேண்டும்.

(10) பொருளொன்று (9) ஆம் உட்பிரிவின்கீழ் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் கட்டுக்காப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் ஒப்படைக்கப்படுமிடத்து, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி, அப்பொருள் கையாளப்படவேண்டிய முறைபற்றி மத்திய அதிகாரியிடமிருந்து எழுத்திலான பணிப்புரையொன்று கிடைக்கும் வரை, (அப்பொருள் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் அதிகாரியொருவருக்கு அனுப்பப்பட வேண்டும் என்ற பணிப்புரையொன்றும் அடங்கலாக) அப்பொருள் கைப்பற்றப்பட்ட தினத்திலிருந்து ஒரு மாதத்தை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அப்பொருளை வைத்திருப்பதற்கு ஒழுங்குசெய்தல் வேண்டும்.

(11) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட தேடுகை ஆணையின் நிறைவேற்றுகை தொடர்பிலான அச்சட்டத்தின் ஏற்பாடுகள், அவை இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவையாக இருக்காத அளவுக்கு, இப்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணைகளின் நிறைவேற்றுகைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(12) இப்பிரிவின் கீழ், ஆணையொன்றை வழங்கும் நீதிவான், (9) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அத்தகைய ஆணைக்கிணங்க தேடுகையொன்றின்போது கைப்பற்றப்பட்ட ஏதேனும் பொருளை, அத்தகைய தேடுகைக்குக் கோரிக்கை விடுக்கும் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அலுவலருக்கு அனுப்பப்படுவதற்காக, கைப்பற்றுதலின் இடத்தையும் சந்தர்ப்பங்களையும் அது கைப்பற்றப்பட்ட பின்னர் அதன் கட்டுக்காப்பையும் குறிப்பிடும் சான்றிதழொன்றுடன் சேர்த்து மத்திய அதிகாரிக்கு அனுப்புவித்தல் வேண்டும்.

16. குற்றவியல் கருமமொன்று தொடர்பில் வழக்கு நடவடிக்கை அல்லது புலனாய்வொன்று இலங்கையில் தொடங்கப்பட்டுள்ளவிடத்தும், அத்துடன் அத்தகைய வழக்கு நடவடிக்கைக்கு அல்லது புலனாய்வுக்கு இயைபான ஏதேனும் பொருள் குறித்துரைக்கப்பட்டவொரு நாட்டில் உள்ளதென நம்புவதற்கு மத்திய அதிகாரிக்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமிடத்தும், அவர் அத்தகைய பொருளை அல்லது அத்தகைய வழக்கு நடவடிக்கைக்கு அல்லது புலனாய்வுக்கு இயைபான அல்லது இயைபானதாக இருக்கக்கூடிய வேறு ஏதேனும் பொருளைத் தேடுகை செய்வதற்கும் கைப்பற்றுவதற்கும் அதிகாரமளிக்கும் ஆணையொன்றுக்கு அல்லது அதிகாரமளித்தலுக்கு விண்ணப்பிப்பதற்கும், அதனைப் பெற்றுக் கொள்வதற்கும் அத்தகைய ஆணையால் அதிகாரமளிக்கப்பட்ட தேடுகையின்போது கைப்பற்றப்பட்ட எதனையும் அவருக்கு அனுப்பிவைப்பதற்கும் விண்ணப்பிக்குமாறு, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்குக் கோரிக்கை விடுக்கலாம். தேடுகைக்கும் கைப்பற்று கைக்கும் இலங்கை விடுக்கும் கோரிக்கை.

## பாகம் VII

### குற்றச் செயல்களின் வரும்படிகளைக் கண்டுபிடித்தலும் கட்டளைகளை வலுவுக்கிடுதலும்

*குற்றச் செயலின் வரும்படிகளைக் கண்டுபிடிப்பதற்கும் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றினால் விடுக்கப்படும் கோரிக்கை.*

**17.** (அ) ஆளொருவர் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் பாரதூரமான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளவிடத்து அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டுள்ளவிடத்து அல்லது அதனைப் புரிந்துள்ளாரென நியாயமான ஏதுக்களின்மீது சந்தேகிக்கப் படுமிடத்து ;

(ஆ) அத்தவறைப் புரிந்ததினின்று நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெறப்பட்ட அல்லது கிடைக்கப்பெற்ற ஏதேனும் ஆதனம் இலங்கையிலுள்ளதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமிடத்து ;

(இ) அத்தகைய ஆதனத்தை அடையாளம் காண்பதில், கண்டு பிடிப்பதில் அல்லது அதன் பெறுமதியை மதிப்பீடு செய்வதில் அத்தகைய குறித்துரைக் கப்பட்ட நாட்டிலுள்ள தோதான அதிகாரி, மத்திய அதிகாரியிடம் உதவிகோருமிடத்து,

மத்திய அதிகாரி, அவரது தற்றுணிபில் அவ்வாறு செய்வது நடைமுறையில் சாத்தியப்படும்போது கோரப்பட்ட உதவியை அளிக்கலாம்.

*குற்றச் செயலின் வரும்படிகளைக் கண்டுபிடிப்பதற்கு இலங்கையினால் விடுக்கப்படும் கோரிக்கை.*

**18.** (அ) ஆளொருவர் இலங்கையில் பாரதூரமான தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவிடத்து அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது அதனைப் புரிந்துள்ளாரென நியாயமான ஏதுக்களின்மீது சந்தேகிக்கப்படுமிடத்து ;

(ஆ) அத்தவறைப் புரிந்ததனின்று நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெறப்பட்ட அல்லது கிடைக்கப்பெற்ற ஏதேனும் ஆதனம் குறித்துரைக் கப்பட்ட நாடொன்றில் உள்ளதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமிடத்து,

மத்திய அதிகாரி, அவரது தற்றுணிபில் அத்தகைய ஆதனத்தை அடையாளங்காண்பதில், கண்டுபிடிப்பதில் அல்லது அதன் பெறுமதியை மதிப்பீடுசெய்வதில் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள தோதான அதிகாரியின் உதவியைத் தேவைப்படுத்தலாம்.

நீதிமன்றக் கட்டளைகளை வலுவுக்கிடுவதற்கு குறித்துரைக்கப்பட்ட நாடொன்றினால் விடுக்கப்படும் கோரிக்கை.

19. (1) (அ) குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிலுள்ள ஒரு நீதிமன்றம் ஒரு குற்றவியல் கருமம் தொடர்பிலான வழக்கு நடவடிக்கையொன்றில் —

(i) ஏதேனும் ஆதனத்தை இழப்பிக்கச் செய்யும் அல்லது ஏதேனும் ஆதனத்தை இழப்பிக்கும் அல்லது பறிமுதல் செய்யும் பயனையுடைய ;

(ii) எவரேனும் ஆளின்மீது குற்றப்பணமொன்றை அல்லது வேறு பணஞ்சார் தண்டப்பணத்தை விதித்து, அல்லது அவ்வாளை, வேறு எவரேனும் ஆளுக்கு நட்டஈடு செலுத்துமாறு தேவைப்படுத்தி ;

(iii) ஏதேனும் ஆதனத்தைக் கையாள்வதிலிருந்து எவரேனும் ஆளை அல்லது எல்லா ஆட்களையும் தடைசெய்து,

கட்டளையொன்றை ஆக்கியுள்ளவிடத்து ;

(ஆ) எந்த ஆதனம் தொடர்பில் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதோ அந்த ஆதனம், இலங்கையில் அமைந்துள்ளதென அல்லது இலங்கையில் அமைந்துள்ள ஏதேனும் ஆதனம் அக்கட்டளையைத் திருப்திசெய்வதற்குண்டு என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமிடத்து ;

(இ) அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரி, இலங்கையில் அத்தகைய கட்டளையை வலுவுக்கிடுவதில் மத்திய அதிகாரியின் உதவியைக் கோரியுள்ளவிடத்து ; அத்துடன்

(ஈ) அத்தகைய கட்டளை குறித்துரைக்கப்பட்ட நாட்டில் வலுவிலுள்ளது எனவும், அத்துடன் மேலும் மேன்முறையீட்டிற்கு அமைந்ததாகவில்லை எனவும் மத்திய அதிகாரி திருப்திப்படுமிடத்து.

மத்திய அதிகாரி, அவரது தற்றுணிபில், அத்தகைய ஆதனம் அமைந்துள்ள மாகாணத்திற்கான, அரசியலமைப்பின் 154ரு என்னும் உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தில் கட்டளையின் பதிவுக்கு விண்ணப்பிக்குமாறு சட்டத்துறை தலைமையதிபதியைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான அதிகாரமளித்தலொன்றைப் பின்பற்றி சட்டத்துறை தலைமையதிபதி கட்டளையொன்றின் பதிவுக்கென மேல் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்குமிடத்து, நீதிமன்றம் அத்தகைய கட்டளையைப் பதிவுசெய்தல் வேண்டும்.

(3) கட்டளையொன்று (2) ஆம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பின்பற்றி மேல் நீதிமன்றத்தில் பதிவுசெய்யப்படுமிடத்து, கட்டளைக்குச் செய்யப்பட்ட திருத்தங்களின் பிரதியொன்று (பதிவுக்கு முன்னர் செய்யப்பட்டதாயினுஞ்சரி, பின்னர் செய்யப்பட்டதாயினுஞ்சரி) கட்டளையைப் போன்று அதே முறையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பதிவின்மீது மட்டுமே திருத்தங்கள் பயனுடையன வாதலும் வேண்டும்.

(4) கட்டளையொன்று அல்லது ஒரு கட்டளைக்கான திருத்தமொன்று, 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க உரிய முறையில் சரியென உறுதி செய்யப்பட்ட கட்டளையின் அல்லது திருத்தத்தின் பிரதியொன்றுடன் அதன் சார்பில் நீதிமன்றத்தால் ஆக்கப்பட்ட எவையேனும் விதிகளுக்கிணங்க பதிவாளரினால் மேல் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(5) நாலாம் உட்பிரிவின்கீழ் மேல் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட கட்டளையொன்றும் அதற்கான எவையேனும் திருத்தங்களும் எல்லா அம்சங்களிலும் அது அந்நீதிமன்றத்தால் செய்யப்பட்ட ஒரு கட்டளை என்றாற் போன்று பயனுறுதல் வேண்டும் என்பதுடன் வலுவுக்கிடவும்படலாம்.

(6) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் கட்டளை அது ஆக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நாட்டில் பயனற்றுப்போய் விட்டது என மேல்நீதிமன்றம் திருப்தியுறுமிடத்து, அது அத்தகைய பதிவை இல்லாதொழித்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கட்டளையொன்று வலுவுக்கிடப்படுதன் காரணமாக, இறுப்பிக்கப்பட்ட அல்லது பறிமுதல் செய்யப்பட்ட ஏதேனும் ஆதனம் அல்லது அறவிடப்பட்ட ஏதேனும் குற்றப்பணம் அல்லது பணஞ்சார் தண்டப்பணம் அல்லது நட்டஈடு, வேறு ஏதேனும் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், கோரிக்கைக்குப் பயனளிக்கும் நோக்கங்களுக்காக மத்திய அதிகாரியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் கையாளப்படுதல் வேண்டும்.

நீதிமன்றக் கட்டளைகளை வலுவுக்கிடுவதற்கு இலங்கையால் விடுக்கப்படும் கோரிக்கைகள்.

20. (அ) இலங்கையிலுள்ள நீதிமன்றமொன்று ஒரு குற்றவியல் கருமம் தொடர்பான வழக்கு நடவடிக்கையொன்றில் —

(i) ஏதேனும் ஆதனத்தை இறுப்பிக்கச் செய்கின்ற அல்லது ஏதேனும் ஆதனத்தை இறுப்பிக்கச் செய்கின்ற அல்லது பறிமுதல் செய்கின்ற பயனையுடைய ;

(ii) எவரேனும் ஆளின்மீது குற்றப்பணம் அல்லது வேறு பணஞ்சார் தண்டப்பணம் ஒன்றை விதித்து அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு நட்டஈடு செலுத்துமாறு அவ்வாளைத் தேவைப்படுத்தும் ;

(iii) ஏதேனும் ஆதனத்தைக் கையாளுவதிலிருந்து எவரேனும் ஆளை அல்லது எல்லா ஆட்களையும் தடை செய்து,

கட்டளையொன்றை ஆக்கியுள்ளவிடத்து ; அத்துடன்

(ஆ) எவ்வாதனம் தொடர்பில் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்டதோ, அவ்வாதனம் அல்லது அத்தகைய கட்டளையைத் திருப்திசெய்வதற்குள்ள ஆதனம் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் அமைந்துள்ளது என நம்புவதற்கு மத்திய அதிகாரிக்கு நியாயமான ஏதுக்கள் இருக்குமிடத்து,

மத்திய அதிகாரி தமது தற்றுணிபில் அத்தகைய கட்டளையை அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டில் வலுவுக்கிடுவதற்கு ஒழுங்குகள் செய்யுமாறு, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்குக் கோரிக்கை விடுக்கலாம்.

## பாகம் VIII

### பொது

ஆவணங்களை சரியென உறுதிசெய்தல்.

**21.** (1) இச்சட்டத்தின்கீழ் விடுக்கப்பட்ட கோரிக்கை ஒன்றிலிருந்து நேரடியாக அல்லது மறைமுகமாக எழுகின்ற, இச்சட்டத்தின் கீழான வழக்கு நடவடிக்கையொன்றில் உரியமுறையில் சரியென உறுதி செய்யப்பட்ட ஆவணமொன்று சாட்சியத்தில் ஏற்கத்தகவுடையதாதல் வேண்டும்.

(2) ஆவணமொன்று —

(அ) குறித்துரைக்கப்பட்ட நாடொன்றிலுள்ள அல்லது நாடொன்றின் நீதிபதி, நீதிவான் அல்லது அலுவலர் ஒருவரால் ஒப்பமிடப்பட்டதாக அல்லது அத்தாட்சிப் படுத்தப்பட்டதாகக் கருதப்படின் ; அத்துடன்

(ஆ) குறித்துரைக்கப்பட்ட நாட்டின் சாட்சியொருவரின் அல்லது அரசாங்க அலுவலர் ஒருவரின் சத்தியத்தின் மூலம் செய்யப்பட்டிருப்பதாக அல்லது குறித்துரைக்கப்பட்ட நாட்டின் அரச அமைச்சர் ஒருவரின் அல்லது குறித்துரைக்கப்பட்ட நாட்டின் அரசாங்கத் திணைக்களமொன்றின் அல்லது அலுவலர் ஒருவரின் அலுவலக முத்திரையால் அல்லது பகிரங்க இலச்சினையால் பொறியிடப் பட்டதாகக் கருதப்படின்

(1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக உரிய முறையில் சரியென உறுதி செய்யப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

ஒழுங்கு விதிகள்.

**22.** (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எந்தக் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் அதிகாரமளிக்கப்படுகின்றனவோ அல்லது ஆக்கப்படவேண்டு

வெனத் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியன்று அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதிப்படக்கூடியவாறான விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும், அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் முன்னர் அதன் கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஒழுங்குவிதி எத்தேதியிலிருந்து அவ்வாறு நீக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றதோ அத்தேதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

23. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

24. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி — பொருள்கோடல்.

“தோதான அதிகாரி” என்பது, —

(அ) பொதுநலவாய நாடொன்றாகிய குறித்துரைக்கப்பட்ட நாடொன்று தொடர்பில், எவ்வாறாக விவரிக்கப்படினும், குற்றவியல் கருமங்களில் அந்நாட்டின் ஏதேனும் சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் உதவியளிக்கப்படுவதற்கான

கோரிக்கைகளைப் பெறுவதற்கும், அனுப்புவதற்கு மென குறித்தொதுக்கப்பட்ட ஆள் என்று பொருள்படும் ;

(ஆ) பொதுநலவாயம் சாரா நாடு என்பது, எவ்வாறாக விவரிக்கப்படினும், குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவிக்கு இலங்கைக்கும் அத்தகைய பொதுநலவாயம் சாரா நாட்டிற்கும் இடையிலான ஏதேனும் உடன்படிக்கையில் அல்லது அத்தகைய உடன்படிக்கைக்குப் பயனளிக்கும் அத்தகைய நாட்டின் ஏதேனும் சட்டத்திலுள்ள உதவியளித்தலுக்கான கோரிக்கைகளைப் பெறுவதற்கும் அனுப்புவதற்குமென குறித்தொதுக்கப்பட்ட ஆள் என்று பொருள்படும் ;

"பொதுநலவாய நாடு" என்பது, பொதுநலவாயத்திற்குட்பட்ட ஒரு நாடு என்று பொருள்படும் என்பதுடன், அத்தகைய நாட்டின் ஒரு குடியேற்றத்தையும், ஆள்புலத்தையும் பாதுகாப்பகத்தையும் அல்லது அத்தகைய நாட்டின் சார்பு நாட்டையும் அல்லது அத்தகைய நாட்டில் பதிவுசெய்யப்பட்ட ஒரு கப்பல் அல்லது வானூர்தியையும் உள்ளடக்கும் ;

"குற்றவியல் கருமம்" என்பது, இலங்கையினுடையதாயினுஞ்சரி, குறித்துரைக்கப்பட்ட நாடொன்றினதாயினுஞ்சரி, ஏதேனும் சட்டத்தின் மீறுகைகள் என்று பொருள்படும் என்பதுடன் வரிவிதிப்பனவு, செலாவணி கட்டுப்பாடு அல்லது சுங்கத்துறை அல்லது பிணையங்கள் அல்லது பணங்கடத்தல் என்பன தொடர்பில் இலங்கையின் அல்லது குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் சட்டத்தின் மீறுகைகளையும் உள்ளடக்கும்.

"உரியமுறையில் சரியென உறுதிப்படுத்தப்பட்டது" என்பது, ஆவணமொன்று தொடர்பில் 21 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு உண்மையென உறுதிப்படுத்தப்பட்ட ஓர் ஆவணம் என்று பொருள்படும் ;

"வெளிநாட்டுச் சட்ட விடுபாட்டுரிமைச் சான்றிதழ்" என்பது, குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் தோதான அதிகாரியால் அல்லது குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின்

சட்டத்தின்கீழ், அந்த குறித்துரைக்கப்பட்ட நாட்டின் சட்டத்தின்கீழ் ஆட்கள் பொதுவாக அல்லது குறித்துரைக்கப்பட்ட ஆளொருவர் பொதுவில் அல்லது குறித்துரைக்கப்பட்ட வழக்கு நடவடிக்கைகளில் அல்லது பொதுவில் அல்லது குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் குறித்துரைக்கப்பட்ட வினாவொன்றுக்கு விடையளிக்குமாறு அல்லது குறித்துரைக்கப்பட ஆவணமொன்றை முன்வைக்குமாறு தேவைப்படுத்தப்படலாம் அல்லது தேவைப்படுத்தப்பட முடியாது என அத்தாட்சிப்படுத்தி அல்லது வெளிப்படுத்தி வழங்கப்படும் ஒரு சான்றிதழ் அல்லது செய்யப்படும் ஒரு வெளிப்படுத்துகை என்று பொருள்படும் ;

"பொதுநலவாயம் சாரா நாடு" என்பது, பொதுநலவாயத்திற்கு வெளியேயுள்ள ஒரு நாடு என்று பொருள்படும் என்பதுடன், அத்தகைய நாட்டின் ஒரு குடியேற்றத்தையும் ஆள்புலத்தையும் பாதுகாப்பகத்தையும் அத்தகைய நாட்டின் சார்புநாட்டையும் அல்லது அத்தகைய நாட்டில் பதிவுசெய்யப்பட்டவொருகப்பலையும் அல்லது வானூர்தியையும் உள்ளடக்கும் என்பதுடன் மக்கள் சீனக் குடியரசின் ஹொங்கொங் விசேட நிர்வாகப் பிராந்தியத்தையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதலும் வேண்டும் ;

"பாரதூரமான தவறு" என்பது, மரண தண்டனையால் அல்லது ஓராண்டிற்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கு மறியற்றண்டனையால் தண்டிக்கப்படற்பாலதான தவறு என்று பொருள்படும்.

**அட்டவணை** (பிரிவு 5)

படிவம் அ

(பிரிவு 7 (i))

**இலங்கை மத்திய அதிகாரிக்கு**

........................................(சந்தேகிக்கப்பட்டவரின் சாட்சியின் பேரோ) ஆளின் பெயரை* (தெரிந்திருப்பின் குறிப்பிடவும்) ............................இல் குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள குற்றவியல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட குற்றவியல் கருமத்தைக் குறிப்பிடவும்) சம்பந்தப்பட்டுள்ளார் என சாட்சியம்/உதவி வழங்கக்கூடியவராக இருக்கின்றார் என சந்தேகிக்கப் படுகின்றார் ஆதலாலும் :

மேற்கூறப்பட்ட........................(சந்தேகிக்கப்பட்டவரின் சாட்சியின் பேரோ) ஆளின் பெயரை* (தெரிந்திருப்பின் குறிப்பிடவும்) இலங்கையில் இருப்பதாக நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளனவாதலாலும் :

மேற்கூறப்பட்ட......................(சந்தேகிக்கப்பட்டவரின் சாட்சியின் பேரோ) ஆளின் பெயரை* (தெரிந்திருப்பின் குறிப்பிடவும்) கண்டுபிடிப்பதற்கு இத்தால் தங்கள் உதவி கோரப்படுகின்றது.

குறித்துரைக்கப்பட்ட நாட்டின்
தோதான அதிகாரி.

படிவம் ஆ

(பிரிவு 7 (i))

**இலங்கை மத்திய அதிகாரிக்கு**

அடையாளம் அறியப்படாதவரும், எவரைப்பற்றி கிடைத்திருக்கும் தகவல் இதன்கீழ் குறித்துரைக்கப்பட்டிருக்கின்றதோ அவருமாகிய ஆளொருவர் ..................................இல் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட குற்றவியல் கருமத்தைக் குறிப்பிடவும்) சம்பந்தப்பட்டிருப்பதாக சாட்சியம்/உதவி* வழங்கக்கூடியவராகவுள்ளார் என சந்தேகிக்கப்படுகின்றார் ஆதலாலும் :

மேற்கூறப்பட்ட ஆள் இலங்கையில் இருப்பதாக நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றனவாதலாலும் :

அத்தகைய ஆளை அடையாளம் காண்பதிலும் கண்டுபிடிப்பதிலும் இத்தால் தங்களது உதவி கோரப்படுகின்றது.

குறித்துரைக்கப்பட்ட நாட்டின்
தோதான அதிகாரி.

படிவம் இ

(பிரிவு 8 (i))

**இலங்கை மத்திய அதிகாரிக்கு**

..................................தொடர்பில் (குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள குற்றவியல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட குற்றவியல் கருமத்தைக் குறிப்பிடவும்) ........................................ இல் (குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள நீதிமன்றத்தின் பெயரைக் குறிப்பிடவும்) வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளதாதலாலும் :

அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில்........................க்கு (எதிராளியின் / சாட்சியின் / வேறு ஆளின் பெயரைக் குறிப்பிடவும்* சேர்ப்பிக்கப்படுவதற்கு அழைப்பாணை/மன்றாணை / ஆவணம்* வழங்கப்பட்டுள்ளதாதலாலும் :

மேற்கூறப்பட்ட............................எதிராளியின்/சாட்சியின்/வேறு ஆளின் *பெயரைக் குறிப்பிடவும்) இலங்கையில் இருக்கின்றார் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளனவாதலாலும் :

மேற்கூறப்பட்ட ............................க்கு (எதிராளியின்/சாட்சியின்/வேறு ஆளின் *பெயரைக் குறிப்பிடவும்) அந்த அழைப்பாணையை / மன்றாணையை / ஆவணத்தை* (அதன் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) சேர்ப்பிப்பதற்கு இத்தால் தங்களது உதவி கோரப்படுகின்றது.

குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள
தோதான அதிகாரி.

படிவம் 4

(பிரிவு 10 (1))

**இலங்கை மத்திய அதிகாரிக்கு**

................................(குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள குற்றவியல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட குற்றவியல் கருமத்தைக் குறிப்பிடவும்) ................................நீதிமன்றத்தில் (குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள நீதிமன்றத்தின் பெயரைக் குறிப்பிடவும்) வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளனவாதலாலும் :

அத்தகைய வழக்கு நடவடிக்கைகளுக்கு இயைபான சாட்சியமளிக்கும் அத்தகைய வழக்கு நடவடிக்கைகளுக்கு இயைபான ................................ (ஆவணத்தின் அல்லது வேறு பொருளின் பெயரைக் குறிப்பிடவும்) முன்வைக்கும் ஆற்றலுடையவரான ................................ (சாட்சியின் பெயரைக் குறிப்பிடவும்) இலங்கையில் இருக்கின்றார் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளனவாதலாலும் :

மேற்கூறப்பட்ட வழக்கு நடவடிக்கைகளின் நோக்கங்களுக்கும் அத்துடன் அத்தகைய சாட்சியத்தை, ஆவணத்தை அல்லது வேறு பொருளை எனக்கு அனுப்பிவைப்பதற்கும்,

(அ) மேற்கூறப்பட்ட ................................ என்பவரின் (விசாரணைக்குத் தேவைப்படுத்தப்பட்ட சாட்சியின் பெயரைக் குறிப்பிடவும்) சாட்சியத்தை எடுப்பதற்கு ; அல்லது

(ஆ) மேற்கூறப்பட்ட................................முன்வைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஆவணத்தை அல்லது வேறு பொருளை விவரிக்கவும்) முன்வைப்பதற்கு.

ஒழுங்கு செய்யுமாறு இத்தால் தங்களுக்கு கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

குறித்துரைக்கப்பட்ட நாட்டின்
தோதான அதிகாரி.

படிவம் 6

(பிரிவு 12 (1))

**இலங்கை மத்திய அதிகாரிக்கு**

.................................... தொடர்பில் (குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள குற்றவியல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட குற்றவியல் கருமத்தைக் குறிப்பிடவும்) .................................. இல் (குறித்துரைக்கப்பட்ட நாட்டின் *பெயரைக் குறிப்பிடவும்) ................................ நீதிமன்றத்தில் (குறித்துரைக்கப்பட்டுள்ள நாட்டிலுள்ள நீதிமன்றத்தின் பெயரைக் குறிப்பிடவும்) வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளமையாலும் புலனாய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையாலும் :

தற்போது ......................... இல் (இலங்கையிலுள்ள சிறைச்சாலையின் *பெயரைக் குறிப்பிடவும்) சிறைத்தண்டனையொன்றை அனுபவிக்கும் .................................... (கைதியின் பெயரைக் குறிப்பிடவும்) அத்தகைய வழக்கு நடவடிக்கைகளுக்கு இசைவான சாட்சியமளிக்கும் அத்தகைய புலனாய்வுகள் தொடர்பில் உதவி அளிக்கும் ஆற்றலுடையவர் என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளமையாலும் :

அத்தகைய வழக்கு நடவடிக்கைகளுக்கு இசைவான சாட்சியமளிக்கும் / அத்தகைய புலனாய்வு தொடர்பில் உதவி வழங்கும் நோக்கங்களுக்கு ................................................ (கைதியின் பெயரைக் குறிப்பிடவும்) ....................................... க்கு (குறித்துரைக்கப்பட்ட நாட்டின் பெயரைக் குறிப்பிடவும்) அகற்றுவதற்கு ஒழுங்குசெய்யுமாறு இத்தால் தங்களுக்கு கோரிக்கை விடுக்கப்படுகின்றது .

குறித்துரைக்கப்பட்ட நாட்டின்
தோதுவான அதிகாரி.

படிவம் ஜ

(பிரிவு 12 (4))

**இலங்கை மத்திய அதிகாரிக்கு**

..................................தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள குற்றவியல் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குட்பட்ட குற்றவியல் கருமத்தைக் குறிப்பிடவும்) ..................................இல் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் *பெயரைக் குறிப்பிடவும்) .................................... நீதிமன்றத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள நாட்டிலுள்ள நீதிமன்றத்தின் பெயரைக் குறிப்பிடவும்) வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளனவாதலாலும் புலனாய்வுகள் தொடங்கப்பட்டுள்ளனவாதலாலும் :

தற்பொழுது இலங்கையிலிருக்கும் ......................................என்பவர் (சாட்சியின் *பெயரைக் குறிப்பிடவும்) அத்தகைய வழக்கு நடவடிக்கைகளில் சாட்சியமளிக்கும் அத்தகைய புலனாய்வு தொடர்பில் *உதவி வழங்கும் ஆற்றலுடையவராயிருக்கின்றார் என நம்புவதற்கும் நியாயமான ஏதுக்கள் உள்ளனவாதலாலும் :

அத்தகைய வழக்கு நடவடிக்கைகளுக்கு இயைபான சாட்சியமளிக்கும் அத்தகைய புலனாய்வு தொடர்பில் *உதவி வழங்கும் நோக்கங்களுக்காக மேற்கூறப்பட்ட .................................... என்பவரை (சாட்சியின் பெயரைக் குறிப்பிடவும்) .................................... என்னுமிடத்திற்கு (குறித்துரைக்கப்பட்ட நாட்டின் பெயரைக் குறிப்பிடவும்) அகற்றுவதற்கு ஒழுங்குசெய்யுமாறு இத்தால் தங்களுக்குக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

குறித்துரைக்கப்பட்ட நாட்டின்
பொருத்தமான அதிகாரி.

படிவம் எ

(பிரிவு 15 (1))

**இலங்கை மத்திய அதிகாரிக்கு**

.................................... தொடர்பில் (பாரதூரமான குற்றின் தன்மையைக் குறிப்பிடவும்) ........................ இலுள்ள (குறித்துரைக்கப்பட்ட நாட்டின் பெயரைக் குறிப்பிடவும்)* .................................. நீதிமன்றத்தின் (குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள நீதிமன்றத்தின் பெயரைக் குறிப்பிடவும்) வழக்கு நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளனவாதலாலும் / புலனாய்வுகள் தொடங்கப்பட்டுள்ளனவாதலாலும் :

அத்தகைய வழக்கு நடவடிக்கைகளுக்கு அல்லது புலனாய்வுக்கு *இணையான (பண்டத்தின் அல்லது பொருளின் விவரணத்தைக் குறிப்பிடவும்) இலங்கையில் அமைந்துள்ளது என நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் இருக்கின்றனவாதலாலும் :

.............................. (பொருளின் அல்லது பண்டத்தின் விவரணத்தைக் குறிப்பிடவும்) தேடுதல் செய்வதற்கும் கைப்பற்றுவதற்கும் அதனை எனக்கு அனுப்பிவைப்பதற்கும் தேடுதல் ஆணையொன்று வழங்குவதற்கு ஒழுங்கு செய்யுமாறு இத்தால் தங்களுக்குக் கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

குறித்துரைக்கப்பட்ட நாட்டின்
தோதான அதிகாரி.

படிவம் ஏ

(பிரிவு 17)

**இலங்கை மத்திய அதிகாரிக்கு**

.................................... என்பவர் (சந்தேகிக்கப்பட்டவரின் குற்றவாளியின் பெயரைக் குறிப்பிடவும்) .................................. இல் (குறித்துரைக்கப்பட்ட நாட்டின் *பெயரைக் குறிப்பிடவும்) .................................. பாரதூரமான குற்றின் தன்மையைக் குறிப்பிடவும்) குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளார் / சந்தேகிக்கப்படுகின்றார்)* ஆதலாலும் :

அத்தகை) பரிவதிலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பெறப்பட்ட அல்லது கிடைக்கப்பெற்ற .................................. (ஆதனத்தை விவரிக்கவும் தெரிந்திருப்பின்) இலங்கையில் இருக்கின்றதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ளனவாதலாலும் :

.................................. ஐ (ஆதனத்தை விவரிக்கவும் தெரிந்திருப்பின்) கண்டுபிடிப்பதில் இனங்காண்பதில் மதிப்பீடு செய்வதில் *இத்தால் தங்கள் ஒத்தாசை கோரப்படுகின்றது.

குறித்துரைக்கப்பட்ட நாட்டின்
தோதான அதிகாரி.

படிவம் ஐ

பிரிவு 19 (1)

## இலங்கை மத்திய அதிகாரிக்கு

................................ நீதிமன்றம் (குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள நீதிமன்றத்தின் பெயரைக் குறிப்பிடவும்) .................................. தொடர்பில் (குற்றவியல் கருமத்தைக் குறிப்பிடவும்) .................................. (ஆதனத்தை விவரிக்கும்) பறிமுதல் செய்து கைப்பற்றி, எவரேனும் ஆளொருவர் குற்றப்பயனொன்றை அல்லது வேறு பயனுக்காகத் தண்டப்பணத்தை விதித்து அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு நட்டஈடு செலுத்துமாறு அவ்வாளைத் தேவைப்படுத்தி/ .................................. இல் (ஆதனத்தை விவரிக்கவும்) கையாள்வதிலிருந்து ஆளெவரையும் தடைசெய்து கட்டளையொன்றை ஆக்கியுள்ளதாதலாலும் :

அந்த ஆதனம் தொடர்பில் கட்டளை ஆக்கப்பட்டபோது அந்த ஆதனம் .................................. (ஆதனத்தை விவரிக்கவும்) இலங்கையில் அமைந்துள்ளது / இலங்கையில் அமைந்துள்ள ஆதனம் கட்டளையைத் திருப்தி செய்வதற்குள்ளது * என நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்கின்றனவாதலாலும் :

அக்கட்டளையை வலுவுக்கிடுவதற்கு (அதன் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) இத்தால் தங்கள் உதவி கோரப்படுகின்றது.

குறித்துரைக்கப்பட்ட நாட்டின்
தொடர்பான அதிகாரி.

* ஏற்புடையனவல்லாதவற்றை நீக்கிவிடவும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1.387: (வெளிநாடு) ரூபா 1.849 ; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம். இல.32. திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம். லோட்டஸ் ரோட். கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.